1982 ஏப்ரல் 5]

தஞ்சை சரஸ்வதிமகால் நூல் நிலையத்தில் பணிபுரியும் ஓய்வு பெற்ற பணியாளர்கள்.

*வினா எண் 759—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தில் ஓய்வு பெற்ற நான்கு பணியாளர்கள் ஓய்வூதியமும், பணிக்கால ஊதியமும் சேர்த்து பெறுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் வேலையில்லா பட்டதாரிகளுக்கு இப் பணிகள் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம். இப்போது இருவர் மட்டுமே அவ்வாறு உள்ளனர்.

(ஆ) தஞ்சை சரஸ்வதி மகால் நிர்வாகக் குழுவே இது குறித்து முடிவு செய்ய வேண்டும்.

கோவாப்டெக்ஸ் துணிகளை மேல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம்.

*வினா எண் 760 திரு. இ. கணேசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவாப்டெக்ஸ் துணிகள் மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில் ஏற்றுமதியை அதிகரிக்க அரசு ஊக்கம் அளிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) ஆம்

திரு. இ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளீடிங் மெட்ராஸ் ரகத் துணிகள் வெளிநாட்டில் நிறைய கிராக்கி இருந்தது என்பது அரசுக்குத் தெரியுமா? நம் நாட்டிலே உள்ள தனிப்பட்ட ஏற்றுமதியாளர்கள் தரம் குறைந்த துணிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பியதால், அந்த மார்க்கெட்டு வீழ்ந்துவிட்டது அரசுக்குத் தெரியுமா? கைத்தறி துணிகளை ஏற்றுமதி செய்ய, லாபநோக்கம் கொண்ட தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்காமல், அரசு நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் மூலம் வெளிநாடுகளுக்கு அனுப்பி, நிறைய அந்நிய செலாவணியைப் பெறுவதற்கு இந்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.